மனனம் செய்ய இந்த வார வசனம்:

**இயேசு திரும்பி வந்தபோது, அங்கே திரண்டு அவருக்காகக் காத்திருந்த மக்கள் அவரை வரவேற்றனர்.**

(லூக்கா 8:40)

இன்றைய நற்செய்தியில் இயேசுவுக்கு இரண்டு பெண்கள் பணிவிடை புரிவதைப் பார்க்கின்றோம். மார்த்தா இயேசுவை தன் வீட்டிற்கு வரவேற்றார். . உணவைத் தயாரித்து விருந்தோம்பல் புரிந்தார். மரியா இயேசுவின் காலடியில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்கும் விருப்பத்தை தேர்ந்துகொண்டார். கடின உழைப்பாளியான மார்த்தா எரிச்சலடைந்து, இயேசுவும் மரியாவை ஒன்றும் சொல்லாமல் இருந்ததற்காக, இயேசுவின் மீதும் கோபம் கொள்கிறார். “ஆண்டவரே, நான் பணிவிடை செய்ய என் சகோதரி என்னைத் தனியே விட்டு விட்டாளே, உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி புரியும்படி அவளிடம் சொல்லும்” என்று கூறுகிறார்.

மார்த்தாவில் நம்மையும் அடையாளம் கண்டுகொள்வது எளிது. நாம் செய்யும் அனைத்து காரியங்களிலும், அதிக ஆர்வமுள்ள மனநிலையில் இருப்போம். மேலும் இதுபோன்ற நம்முடைய ஆர்வம் நம்முள் இருக்கும் தூய ஆவியாரை எளிதில் அடக்கிவிடமுடியும். பவுல் அடிகளாரும் தம்முடைய கடிதம் ஒன்றில், “மகிழ்ச்சியோடு கொடுப்பவரை கடவுள் அன்பு செய்கிறார்” என்று நினைவூட்டுகிறார்.

இருப்பினும் மரியாவை மார்த்தாவோடு ஒப்பிடும்போது, மரியாவும் வேறுவகையில் தம்முடைய உபசரிப்பைக் காட்டுகிறார். மரியா இயேசுவின் மாணவரைப் போல ஒரு சீடனின் தோற்றத்தைக் கொண்டிருக்கிறார். அவர் சொல்வதைக் கேட்க விரும்பினார். அவருடைய வார்த்தையில் தன்னை வளப்படுத்திக்கொண்டார்.

மார்த்தாவின் குற்றச்சாட்டுக்கு எதிராக மரியாவை இயேசு பாதுகாக்கிறார். ஆனாலும் மார்த்தாவை மிகவும் மதிக்கும் விதத்தில் அதை அன்பாக செய்கிறார். இதிலிருந்து இயேசு இரண்டு சகோதரிகளையும் மிகவும் அன்பு செய்தார் என்பது தெளிவாகிறது. இருந்தபோதும், மரியா தமக்குக் காட்டும் உபசரிப்பு; கவனத்துடன் கேட்கும் உபசரிப்பு. ஆர்வத்துடன் செயல்படுவதைக் காட்டிலும் அருகில் இருந்து, வீற்றிருப்பதை இயேசு மிகவும் மதிக்கிறார். இந்த நிகழ்வில் இதுபோன்ற உபசரிப்பைத் தான் இயேசு மிகவும் விரும்புவது நமக்குத் தெளிவாகிறது. அதனால் தான், “மரியா நல்லப் பங்கைத் தேர்ந்துகொண்டார்” என்று இயேசு கூறுகிறார்.

இயேசுவோடு கொண்டுள்ள நமது உறவில், அவரது வேலையாட்களில் ஒருவராக, சுறுசுறுப்பாக அவருக்குப் பணிவிடை செய்வதன்மூலம் அவரோடு இருக்க ஒரு குறிப்பிட்ட நேரம் உண்டு. இதைத் தான் ஆபிரகாம் முன்பின் தெரியாதவர்களை முழுமையாக உபசரித்ததன் வழியாக ஆண்டவருக்கே அந்தப் பணிவிடையைச் செய்தார் என்று நாம் பார்க்கிறோம். இருப்பினும், அமைதியோடு இயேசுவின் பிரசன்னத்தில் வீற்றிருக்க வேண்டியதும் மிகவும் அவசியம். கிறிஸ்துவின் மாட்சி நம் மத்தியில் இருக்கிறது; கிறிஸ்து நம் மத்தியில், நம்மில் இருக்கிறார் என்று பவுல் அடிகளார் கூறுகிறார்.

இன்று நம்முடைய பரபரப்பான சூழலுக்கு மத்தியிலும் இயேசு அவரின் பிரசன்னத்தை, நம்மில். நம்மத்தியில் அமைதியில் கவனிப்பதற்கான வழிகளைக் கண்டறிய நம்மை அழைக்கிறார். **கடவுளுக்கும், ஒருவர் மற்றவருக்கும் கொடுக்கக்கூடிய பரிசுகளில் மாபெரும் பரிசு, நம்முடைய கவனம் என்னும் பரிசு.** ✣

**இன்றைய வாசகங்கள்:**

தொடக்கநூல்: 18:1-10;

திபா: 15: 2-5;

கொலோசையர்: 1: 24-28;

லூக்கா: 10: 38-42.

INTERNAL CIRCULATION ONLY
BUL 29/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

17 ஜூலை 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் ஆண்டின் 16 ஆம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**உலக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் தினம் (ஜூலை 24)**

# எவ்வாறு நான் ஆண்டவரை வரவேற்பது?

இயேசு மக்களை உபசரிப்பவர். உண்மையில் அவர் கடவுளின் விருந்தோம்பலை வெளிப்படுத்த வந்தவர். குறிப்பாக தேவையில் இருப்போருக்கு விருந்தோம்பலை வெளிப்படுத்த வந்தவர். மறுபுறம் மற்றவர்களின் விருந்தோம்பலையும் இயேசு ஏற்றுக்கொண்டவராக காட்டப்படுகிறார்.

